வேண்டுமென்று சொன்னால் ஏற்கெனவே இருக்கிற பணிமனைக்கும் புதிய பணிமனைக்கும் உள்ள இடைவெளி 40 கிலோ மீட்டர் இருக்க வேண்டுமென்று அரசாணை உள்ளது. ஆனால், கீரனூரிலிருந்து 29 கிலோ மீட்டர் பக்கத்தில் திருச்சியில் ஒரு பணிமனையும், கீரனூரிலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் புதுக்கோட்டையில் ஒரு பணிமனையும் இருப்பதால் அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப, கீரனூரில் ஒரு புதிய பணிமனை அமைக்க வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலான கிலோ மீட்டர் இடைவெளி இல்லாததால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பணிமனை கீரனூரில் அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லி இருக்கின்றார்கள். இருந்தாலும், இந்த ஆண்டில் அந்த கீரனூர் பகுதிகளிலே வாழக்கூடிய பொதுமக்களின் நலனைக் கருத்தில் எண்ணி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில், கீரனூரில் பணிமனை கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணையை மாற்றுகின்ற சூழ்நிலை உருவானால், அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 271, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

271—

விரைவுப் பேருந்து வசதி

***53118—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து திருச்செந்தூருக்கு அரசு விரைவுப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து நாமக்கல் வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பயன்படுத்தி, திருச்செந்தூர் சென்று வர ஏதுவாக உள்ளதால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாமக்கல்லிலிருந்து திருச்செந்தூருக்கு நேரடிப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 272, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

272—

புரோமின் தயாரித்தல்

***50851—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் உப்பு நிறுவனம் உப்பு தயாரிக்கும்போது ஏற்படும் கழிவான பிட்டன் என்ற கழிவுப் பொருளிலிருந்து புரோமின் என்ற இரசாயனப் பொருளைத் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் பாதம் பணிந்து, உப்பு தயாரிக்கும்போது ஏற்படும் கழிவான பிட்டன் என்ற கழிவுப் பொருளிலிருந்து தயாரிக்கப்படும் புரோமின் என்ற இரசாயனப் பொருள், தனியார் நிறுவனங்களின் சார்பில் தயாரிக்கப்படுகிறதா அல்லது அரசின் சார்பில் தயாரிக்கப்படுகிறதா? இந்த புரோமின் என்ற இரசாயனப் பொருள் எந்தவிதமான உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.